DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 2 PW- 6

| | |
|---|---|
| Name | : போகர்சாமி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : போஸ் |
| Village | : செந்துறை |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 32/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of December 2025

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து செல்போன் பழுது நீக்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் சித்தப்பா மற்றும் சித்தி ஆவார்கள். கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் மாலை சுமார் 7.30 மணியளவில் எங்கள் வீட்டில் வைத்து ஆஜர் எதிரிகளுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த 2 நபர்கள் வந்தார்கள். அப்போது ஆஜர் 1வது எதிரி கையாலும், 2ம் எதிரி விளக்கமாற்றாலும் என் தம்பி அ.சா.1ஐ அடித்தார்கள். அப்போது துவரங்குறிச்சியில் இருந்த எனக்கு என் தம்பி அ.சா.1 போன் மூலம் எதிரிகள் அடித்த விபரத்தை சொன்னார். மேலும், எங்கள் மைத்துனர் தினேஷ் என்பவர் உதவியுடன் அவருடைய கேபிள் ஆபரேட்டர் அறையில் என் தம்பியை படுக்க வைத்திருந்தார். நான் உடனடியாக சம்பவ இடம் வந்து என் தம்பியை செந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்தபோது என் தம்பி என்னிடம் எதிரிகள் என்னை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எனவே செந்துறை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்ல வேண்டாம் என கூறினார். எனவே நத்தம் அரசு மருத்துவமனையில் என் தம்பியை சிகிச்சைக்கு சேர்த்தேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக என் தம்பியை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் தம்பிக்கு வாய், தொண்டை மற்றும் வலது பக்க நெற்றிப்

பொட்டிலும் காயம் இருந்தது. மேற்படி காயங்களுக்காக என் தம்பி மதுரை அரசு மருத்துவமனையில் சுமார் 5 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

2) இந்நிலையில் நத்தம் காவல் நிலையத்தில் சம்பவத்தன்றே நாங்கள் கொடுத்த புகார் மனுவின் பேரில் நடவடிக்கை இல்லாததால் சமூகம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கோரியிருந்தோம். அதன்பேரிலும் நடவடிக்கை இல்லாததால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து அதன்பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. போலீசார் இன்று வரைக்கும் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) இந்த குற்ற வழக்கில் புகார் ஆனது யார் கொடுத்தார் என்றால் நான் கொடுத்தேன். எனது தந்தை போஸ் என்பவரது இடத்தை 1ம் எதிரி கிரையம் பெற்ற வகையில் எங்களுக்கும், எதிரிகளுக்கும் வெகுகாலமாக விரோதம் உள்ளது என்றால் சரியல்ல, எப்போதிலிருந்து விரோதம் உள்ளது என்றால் 2018 இல் இருந்து உள்ளது. நான் நிரந்தரமாக துவரங்குறிச்சியில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தற்காலிகமாக தான் வசித்து வருகிறேன். செந்துறையில் நான் வசித்து வருவதற்கு அரசு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. நானும், எனது தம்பியும் மைனராக இருந்த பொழுது எனது பெற்றோர் இறந்து விட்டதால் பாட்டியின் பராமரிப்பில் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. மாமாவின் பராமரிப்பில் இருந்தோம். எனது பாட்டி எங்களது பராமரிப்பிற்காக சொத்தை 1ம் எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், அந்த கிரையம் பற்றி எங்களுக்கு தெரியாது. அந்தக் கிரைய சொத்தை பொறுத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று 1ம் எதிரி திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 641/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதே நீதிமன்றத்தில் எனது தம்பி பாகப்பிரிவினை கோரியும், கிரைய பத்திரம் செல்லாது என்று கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4) சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், அந்த சமயம் நான் துவரங்குறிச்சியில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக எனக்கு தகவல் எப்பொழுது கிடைத்தது என்றால் மாலை சுமார் 7:15 மணியளவில் கிடைத்தது. சாட்சி தற்பொழுது தனக்கு 7:45 மணிக்கு கிடைத்ததாக சொல்கிறார். அதற்கு முன்பே சம்பவம் நடந்துவிட்டது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு செந்துறை வந்தேன் என்றால் 8:15 இருக்கும். அப்பொழுது எனது தம்பி எனது மைத்துனர் ஆகிய தினேஷ் குமார் என்பவரது கேபிள் ரூமில் படுத்திருந்தார். செந்துறையில் இருந்து நத்தம் அரசு மருத்துவமனைக்கு வரும் வழியில் தான் நத்தம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை எனது தம்பி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5) மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. அங்கு ஐந்து நாட்கள் உள்நோயாளியாக எனது தம்பி சிகிச்சை எடுத்துக்கொண்டார். சிகிச்சையிலிருந்து வந்த பிறகு நத்தம் காவல் நிலையத்திற்கு சென்று கொடுக்கப்பட்ட புகார் குறித்த நிலையை கேட்டு அறிந்தோமா என்றால் கேட்டோம். அவர்கள் எவ்வித பதிலும் சொல்லவில்லை. திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம்.
எனது தம்பி மற்றும் என்னை காவல் துறையினர் எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. எங்களை விசாரிக்காமலேயே எதிரிகள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களை விசாரிக்காமலேயே எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும் என்றால் சரிதான். வழக்கை சரிவர விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்து மீண்டும் விசாரணை செய்யக்கோரி எனது தம்பி தாக்கல் செய்த மனு சி.ஆர்.எம்.பி.எண்.1602/2022

முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு எதிர்த்து மேல்முறையீடு எதுவும் நாங்கள் செல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தி வருகிறோம் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.12.01 15:15:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்